வணக்கம்

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : மலர்விழி**

**தேதி 29.05.2025 நேரம் மாலை 6.10 மணி**

---

**தலைப்புச் செய்திகள்**

இந்திய பொருளாதாரம், எரிவாயு அடிப்படையிலான பொருளாதாரமாக, விரைந்து மேம்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

முழுமையான ஆரோக்கியம் என்னும் லட்சியத்தில் அனைத்து துறைகள், மற்றும், மக்களை ஒருங்கிணைக்கும் இயக்கமே, சர்வதேச யோகா தினம் என்று **மத்திய அமைச்சர்** திரு பிரதாப் ராவ் ஜாதவ் கூறியுள்ளார்.

புதுச்சேரியில், மத்திய-மாநில ஒருங்கிணைந்த வீட்டு வசதி திட்டத்தின் கீழ் மானியம் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்களை, முதலமைச்சர் திரு.ரங்கசாமி இன்று வெளியிட்டார்.

மத்திய அரசுத் திட்டம் மூலம் விவசாயிகளுக்கு இலவசமாக சோலார் பேனல் வழங்க புதுச்சேரி அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக, மாநில வேளாண் அமைச்சர் திரு ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

மோடி 1(19)

இந்திய பொருளாதாரம், எரிவாயு அடிப்படையிலான பொருளாதாரமாக, விரைந்து மேம்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார். இன்று மேற்கு வங்க மாநிலம் அலிப்பூர் துவாரில் நடைபெற்ற விழாவில் அவர் கலந்து கொண்டு அலிப்பூர் துவார்-கூச்பிகார் நகர்புற எரிவாயு விநியோக திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார். வீடுகளுக்கு குழாய் மூலம் எரிபொருள் வழங்கும் திட்டங்களால் கேஸ் சிலிண்டர் பயன்பாடும், சுற்றுச்சூழல் மாசுபாடுகளும் குறையும் என்று அவர் தெரிவித்தார். முன்னதாக, சிக்கிம் செல்லும் வழியில் மேற்கு வங்க மாநிலம் பாக்டோக்ரா விமான நிலையத்தில் வந்திறங்கிய பிரதமர், சாதகமற்ற வானிலை காரணமாக சிக்கிம் பயணத்தை தவிர்த்து, சிக்கிம் மாநிலத்தின் 50 ஆம் ஆண்டு விழாவில் காணொளி காட்சி மூலம் கலந்து கொண்டார். சிக்கிம் உள்ளிட்ட வடகிழக்கு பிராந்தியம் முழுவதும் இந்தியாவின் வளர்ச்சிக் கதையில், மிளிரும் அத்தியாயமாக மேம்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார். அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்ற அடிப்படையில், வடகிழக்கு மாநிலங்களுக்கு தமது அரசு முழு ஆதரவு அளித்து வருவதாகவும், சிக்கிம் விரைவிலேயே, உலக அளவிலான சுற்றுலா கேந்திரமாக மேம்படும் என்றும் கூறினார். கடந்த 10 ஆண்டுகளில் சிக்கிமில் 400 கிலோ மீட்டர் நீளத்திற்கு புதிய நெடுஞ்சாலைகள் அமைக்கப் பட்டுள்ளதாகவும், சிக்கிம் மாநிலத்தை

மோடி 2(10)

நாட்டின் பிரதான ரயில்வே கட்டமைப்புடன் இணைக்க, பணிகள் நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஏற்கனவே முழுமையாக இயற்கை வேளாண்மைக்கு மாறியுள்ள சிக்கிமில் தற்போது இயற்கை முறை மீன் வளர்ப்பிலும் முக்கிய கவனம் செலுத்தப்படுவதை பிரதமர் பாராட்டினார். அடுத்த 25 ஆண்டுகளில் பசுமை மாநிலத்திற்கான எடுத்துக் காட்டாக சிக்கிமை மாற்றுவதே நமது நோக்கமாக இருக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியின் போது, சிக்கிம் மாநிலம் நாம்ச்சி மாவட்டத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள மருத்துவமனை, மற்றும், இதர திட்டங்களை பிரதமர், காணொளி காட்சி மூலம் தொடக்கி வைத்தார்.

*யோகா தினம் 1* (8)

11 ஆவது சர்வதேச யோகா தின கொண்டாட்டங்களுக்கான முன்னேற்பாடுகள் குறித்து சம்பந்தப்பட்ட பல்வேறு அமைச்சகங்களுக்கு இடையிலான குழுவின் கூட்டம் புதுடெல்லியில் நடைபெற்றது. மத்திய ஆயுஷ்துறை அமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் இக் கூட்டத்தில் பேசுகையில், சர்வதேச யோகா தினம் என்பது முழுமையான ஆரோக்கியம் என்னும் பொதுவான லட்சியத்தில் அனைத்து துறைகள், அமைப்புகள்,

மற்றும், மக்களை ஒருங்கிணைக்கும் இயக்கமே தவிர, வெறும் கொண்டாட்டம் அல்ல என்று கூறினார். இக் கூட்டம் குறித்து, கூடுதல் விவரங்கள்......

**(வாய்ஸ்)**

யோகா தினம் 2 (13)

**(வாய்ஸ்)**

யோகாவை அனைத்து மக்களுக்கும் எடுத்துச் செல்வதான பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வையை நிறைவேற்ற, ஒட்டுமொத்த அரசையும் முழுமையாக ஈடுபடுத்தும் அணுகுமுறையை கடைபிடிக்க வேண்டும் என மத்திய அமைச்சர் திரு ஜாதவ் வலியுறுத்தினார். சர்வதேச யோகா தினம் உலக அளவில் பெரிய இயக்கமாகவே மேம்பட்டு உள்ளதாக, மத்திய ஆயுஷ் துறை செயலர் வைத்யா.ராஜேஷ் கொட்டேச்சா கூறினார். இவ்வாண்டு, கொண்டாட்டங்களின் முக்கிய அம்சமான **யோகா சங்கம்** ஏற்பாட்டின் கீழ், சர்வதேச யோகா தினமான ஜூன் 21 ஆம் தேதியன்று, நாடு முழுவதும் 1 லட்சத்திற்கும் மேற்பட்ட யோகா செயல்விளக்க நிகழ்ச்சிகள், ஒரே சமயத்தில் நடைபெறும் என்றும், விசாகப்பட்டினத்தில் நடைபெற உள்ள தேசிய அளவிலான விழாவிற்கு, பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமை ஏற்பார் என்றும் அவர் தெரிவித்தார்.

வீட்டு வசதி 1 (17)

புதுச்சேரியில், பிரதமரின் இரண்டாம் கட்ட வீட்டு வசதி திட்டத்தை, மாநில அரசின் பெருந்தலைவர் காமராசர் நூற்றாண்டு வீடு கட்டும் திட்டத்துடன் இணைத்து உருவாக்கப் பட்டுள்ள ஒருங்கிணைந்த வீட்டு வசதி திட்டத்தின் கீழ், பொதுப் பிரிவினர் மற்றும் இதர பின்தங்கிய பிரிவினர் வீடு கட்டிக் கொள்ள, தலா 5 லட்ச ரூபாய் நிதியுதவி அளிப்பதற்கான ஆணையை மாநில அரசு வெளியிட்டுள்ளது. உயர்த்தப்பட்ட இந்த நிதியுதவியை தகுதியுள்ள பயனாளிகள் பெறுவதற்கான விண்ணப்ப படிவங்களை இன்று முதலமைச்சர் திரு ரங்கசாமி வெளியிட்டார். சட்டப்பேரவையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், சட்டப்பேரவை தலைவர் திரு ஆர் செல்வம், பொதுப்பணித்துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், குடிமைப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு திருமுருகன், சட்டப்பேரவை துணை தலைவர் திரு ராஜவேலு, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு கே எஸ் பி ரமேஷ், திரு பாஸ்கர் (எ) தட்சணாமூர்த்தி, திரு வி பி ராமலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு, விண்ணப் படிவங்களை பெற்றுக் கொண்டனர். அரசு செயலர் திரு கேசவன், மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன் உள்ளிட்டோர் உடனிருந்தனர். பிரதமரின் முதல்

வீட்டு வசதி 2 (7)

கட்ட வீட்டு வசதி திட்டத்தின் கீழ் விண்ணப்பித்து, இதுவரை மானியம் வழங்கப் பெறாதவர்களுக்கும், ஏற்கனவே அடித்தளம் வரை வீடு கட்டி உள்ளவர்களுக்கும் புதிய திட்டத்தின் கீழ் முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் புதுச்சேரி அரசின் கிராம மற்றும் நகர அமைப்புத் துறை தெரிவித்துள்ளது. இதற்கான விண்ணப்ப படிவங்களை துறையின் இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம், அல்லது, குடிசை மாற்று வாரியத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஜெயக்குமார் 1 (11)

மத்திய அரசுத் திட்டம் மூலம் விவசாயிகளுக்கு இலவசமாக சோலார் பேனல் வழங்க புதுச்சேரி அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக, மாநில வேளாண் அமைச்சர் திரு ஜெயக்குமார் தெரிவித்துள்ளார். விவசாய தேவை இல்லாத காலங்களில் அரசுக்கு மின்சாரம் வழங்கி, அதன் மூலம் விவசாயிகள் வருமானம் ஈட்ட இதனால் ஏதுவாகும் என்றும் அவர் கூறியுள்ளார். மத்திய வேளாண் அமைச்சகம் சார்பில் நாடு முழுவதும் 700 மாவட்டங்களில் இன்று முதல், வரும் ஜூன் 12 ஆம் தேதி வரை நடைபெறும் விக்சித் கிரிஷி சங்கல்ப் அபியான் பிரச்சார இயக்கத்தின் கீழ்,

புதுச்சேரியில் மேற்கொள்ளப்படும் பணிகளை, திருக்காஞ்சி கோவில் திருமண நிலையத்தில் இன்று அவர் தொடக்கி வைத்து பேசினார். அமைச்சர் மேலும் கூறுகையில்.....

**(வாய்ஸ்)**

*ஜெயக்குமார்* 2 (8)

வேளாண் மேம்பாட்டிற்கான பிரச்சார இயக்கத்தின் தொடங்க விழாவில், பெருந்தலைவர் காமராஜர் வேளாண் அறிவியல் நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் முதல்வர் திரு விஜயகுமார், கூடுதல் வேளாண் இயக்குநர் திரு ஜாகீர் உசேன், முதன்மை விஞ்ஞானி திருமதி மாலதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இந்த 15 நாள் பிரச்சார இயக்கத்தின் போது, விவசாயிகளுக்கான மத்திய அரசின் திட்டங்கள், புதிய வேளாண் தொழில்நுட்பங்கள் மற்றும் ட்ரோன் பயன்பாடு குறித்து கிராமங்கள் தோறும் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறப்படும்.

*பரம் வீர் சக்ரா* 1 (7)

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் வெற்றியை நாம் கொண்டாடி வரும் வேளையில், இந்தியப் படையினரின் வீரத்தை நாடே போற்றுகிறது. இந்தியப் படையினருக்கு புகழாரம் சூட்டும் வகையில் ஆகாஷ்வாணி செய்திப் பிரிவு, சிறப்பு தொடர் ஒன்றை ஒலிபரப்பி வருகிறது. அந்த வரிசையில், 1962 ஆம் ஆண்டு சீனா-இந்தியா போரில் நாட்டிற்காக

உயிர்தியாகம் செய்து, பரம்வீர் சக்ரா விருது பெற்ற, மேஜர் ஷைத்தான் சிங் குறித்து ஒரு செய்தி தொகுப்பு....

(வாய்ஸ்)

*பரம் வீர் சக்ரா* 2 (19)

1924 ஆம் ஆண்டு ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரில் பிறந்தவரான மேஜர் ஷைத்தான் சிங், 1949 ல், குமாவோன் படைபிரிவில் இணைந்தவராவார். 1962 ஆம் ஆண்டு சீனா-இந்தியா போரின் போது அவர் இப்படைப் பிரிவின் C – கம்பெனிக்கு தலைமை ஏற்று, தரை மட்டத்தில் இருந்து 5 ஆயிரம் மீட்டர் உயரத்தில் உள்ள ரெசாங் லா பகுதியில் நிலை கொண்டிருந்தார். 5 படைக் குழுக்களின் பாதுகாப்பில் இருந்த இந்த ராணுவ நிலை நவம்பர் 18 ஆம் தேதி அதிகாலை சீனப் படைகளின் பெருமெடுப்பிலான தாக்குதலுக்கு ஆளாயிற்று. மலைப்பகுதியின் குறுகிய பள்ளத்தாக்குகள் வழியாக எதிரிப் படைகள் அணி- அணியாக வந்தபோது, இந்திய படையினர் சரமாரியாக சுட்டு, எதிரிகளுக்கு கடும் சேதம் விளைவித்தனர். உடலை உறையச் செய்யும் பனிக்கு இடையிலும், குறிப்பாக, 7, 8 மற்றும் 9 ஆம் படைக் குழுவை சேர்ந்த குமாவோனி வீரர்கள், இணையற்ற வீரத்துடன் போரிட்டனர். எதிரி படையினர் உடனான நேருக்கு நேர் சண்டையிலும் இவர்கள் கொஞ்சம் கூட விட்டுத் தராமால் கடைசி வரை போராடினர். எல்லா பக்கங்களில் இருந்தும் எதிரிகள் சுற்றி வளைத்து தாக்கிய நிலையிலும் இவர்கள் பின்வாங்க

மறுத்தனர். C கம்பெனி படைக்குழுவின் தலைவரான மேஜர் ஷைத்தான் சிங், போற்றத்தக்க முறையில், சக வீரர்களை தொடர்ந்து வழிநடத்தி, ரெசாங் லா போர் களத்தில் இணையற்ற துணிச்சல்

*பரம் வீர் சக்ரா* 3 (12)

மற்றும் தலைமைத்துவத்தை வெளிப்படுத்தினார். சொந்த பாதுகாப்பை கொஞ்சமும் கருதாமல், ஒவ்வொரு படைக்குழுவாக சென்று, அவர்களுடன் இணைந்து போரில் ஈடுபட்ட மேஜர் ஷைத்தான் சிங்கை, சக வீரர்கள் இருவர், படைக்களத்தில் இருந்து அகற்ற முயன்றபோது, சீன படையினர் அவர் மீது, கனரக இயந்திர துப்பாக்கி மூலம் சுட தொடங்கினர். ஷைத்தான் சிங், நிலைமையின் அபாயத்தை உணர்ந்து, தம்மை அங்கேயே விட்டுவிட்டு விலகிச் செல்லுமாறு சக வீரர்களுக்கு கட்டளையிட்டார். சக வீரர்கள், மலைச் சரிவிலிருந்த ஒரு பாறைக்கு பின்னால் அவரை கிடத்திவிட்டு நகர்ந்த நிலையில், அங்கேயே அவரது உயிர் பிரிந்தது. இத்தகைய அபார துணிச்சல், தலைமைத்துவம் மற்றும் கடமைப் பற்றுக்காக, மேஜர் ஷைத்தான் சிங்-கிற்கு, மரணத்திற்கு பிந்தைய முறையில் பரம் வீர் சக்ரா விருது வழங்கப்பட்டது.

வானிலை (14)

நேற்று வங்கக்கடலில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி இன்று, ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப் பெற்றுள்ளது. இது, வடக்கு திசையில் தொடர்ந்து நகர்ந்து, இன்றைய தினமே வங்காள-வங்கதேசக் கரையை கடக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது. தமிழகத்திலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் மேலும் சில நாட்களுக்கு மழை நீடிக்கலாம் என்றும், சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்றைய தினம், திருப்பூர், திண்டுக்கல் மாவட்டங்களில் கனமழைக்கும், நெல்லை மாவட்டத்தின் மலைப்பகுதிகள், குமரி, தேனி, தென்காசி மாவட்டங்களில், மிக கனமழைக்கும், கோவை மாவட்டத்தின் மலை பகுதிகள் மற்றும் நீலகிரி மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் அதிகன மழைக்கும் வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பலத்தகாற்றுக்கு வாய்ப்பு உள்ள வங்க கடல் பகுதிகள் மற்றும் தமிழக கடலோர பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

ஐபிஎல் (7)

ஐபிஎல் கிரிக்கெட்டில், ப்ளே-ஆப் சுற்று, இன்று தொடங்குகிறது. முல்லன்பூரில் இன்று இரவு 7.30 மணிக்கு நடைபெற உள்ள முதலாவது குவாலிபையர் போட்டியில், பஞ்சாப்-பெங்களுரு அணிகள் மோத உள்ளன. புள்ளி பட்டியலில் 3 ஆவது இடத்தில் உள்ள குஜராத் அணி,

நாளை நடைபெற உள்ள எலிமினேட்டர் போட்டியில், 4 ஆவது இடத்தில் உள்ள மும்பை அணியை எதிர் கொள்கிறது. 2 வது குவாலிபையர் போட்டி, ஜூன் 1 ஆம் தேதியும், ஐபிஎல் இறுதிப் போட்டி, ஜூன் 3 ஆம் தேதியும் நடைபெறும்.

*அண்ணாதிடல்* (10)

புதுச்சேரியில் அண்ணா திடல் மற்றும் அதை சுற்றியுள்ள கடைகளை பொலிவுறு நகர திட்டத்தின் கீழ் மேம்படுத்தும் பணிகளில், முதல் கட்டமாக லப்போர்த் வீதியில் உள்ள 20 கடைகளும், சின்ன சுப்புராயப்பிள்ளை வீதியில் உள்ள 79 கடைகளும் கட்டி முடிக்கப்பட்டதை தொடர்ந்து, அங்கு ஏற்கனவே கடை நடத்தி 36 பேருக்கு கடை ஒதுக்கீட்டு ஆணைகளை இன்று முதலமைச்சர் திரு ரங்கசாமி வழங்கினார். ஏற்கனவே ஒதுக்கீட்டு ஆணை பெற்ற 50 பேரையும் சேர்த்து, மொத்தம் 86 பயனாளிகளுக்கு கடை சாவிகள் வழங்கப் பட்டன. இந்நிகழ்ச்சியின் போது, சட்டமன்ற உறுப்பினர் திரு நேரு என்கிற குப்புசாமி, உள்ளாட்சித் துறை இயக்குநர் திரு சக்திவேல், புதுச்சேரி நகராட்சி ஆணையர் திரு கந்தசாமி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

புதுச்சேரி தீயணைப்பு (8)

புதுச்சேரி அரசின் தீயணைப்புத் துறையில், உடல் தகுதி தேர்வு மற்றும் எழுத்து தேர்வு மூலம், நிலைய அதிகாரி பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட, 2 பெண்கள் உட்பட நால்வருக்கு, இன்று முதலமைச்சர் திரு ரங்கசாமி பணி ஆணைகளை வழங்கினார். சட்டப்பேரவை தலைவர் திரு ஆர் செல்வம், தீயணைப்புத் துறை அமைச்சர் திரு சாய் சரவணன் குமார், மற்றும் தீயணைப்புத் துறை அதிகாரிகள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். புதுச்சேரியில் முதன் முறையாக தீயணைப்புத் துறையில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டு இருப்பது குறிப்பிடத் தக்கது.